# அருப்புக்கோட்டை நகராட்சி

**விகாரி ஆண்டு கார்த்திகை மாதம் நாள் :26.11.2019 செவ்வாய் கிழமை காலை 11.30 மணிக்கு நகராட்சி அலுவலகத்தில் தனி அலுவலர் அறையில் நடைபெற்ற நகர்மன்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை :— திரு.கா.சேர்மக்கனி M.Tech., தனி அலுவலர்**

**பொருள் 1 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு F, பிளாக் 9, சர்வே எண்கள் 1/11, 12, 13, 3/1, 2, 3, 4, 5, 6, 7, 4/3 (பகுதி), 4 (பகுதி), நகரளவு எண் 6, 7, 8, 6/1, 2, 3, 4, 5, 6 (பகுதி)ல் 20.21 ஏக்கர் (81816.70சமீ) பரப்பளவு இடத்தில் அமைந்துள்ள அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண்கள் 78, 172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.J.ராஜேந்திரன் மற்றும் ஐந்துபேர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 476/2019 நாள் 23.09.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழுங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூஙகா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 5428/2019 நாள் 07.11.2019ல் மனுதாரர்களால் நகராட்சிக்கு தானமாக வழுஙகப்பட்டுள்ளது. மேற்படி பூஙகா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச்சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.6410/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.803</u>**

**பொருள் 2 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 19 முதல் 36 வரை உள்ள பகுதிகளில் மொத்தம் உள்ள 405 எண்ணம் அடிகுழாய்களில் ஏற்படும் பழுதுகளை செப்டம்பர் 2019 முதல் ஆகஸ்ட் 2020 வரை ஓர் ஆண்டிற்கான பழுது பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.7.00 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.777, நாள்.30.09.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 08.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.S.சஙகரன் அருப்புக்கோட்டை | 0.48 % மதிப்பீட்டு விலையை விட குறைவாக |
| 2. | திரு.A.P. மோகன்குமார் அருப்புக்கோட்டை | 11.06 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :—**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 0.48 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.S.சஙகரன், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.5869/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.804</u>**

**பொருள் 3 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்குட்பட்ட 36 வார்டுகளில் ஏற்கனவே சேர்க்கப்படாத CFL தெருவிளக்குகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிக்கு உத்தேச மதிப்பீடு ரூ.1.17 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.781, நாள்.11.10.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 08.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | M/s.Sri Sudharsana Engineering Works, Salem | 8.33 % மதிப்பீட்டு தொகையை விட அதிகமாக |
| 2. | M/s.Veena Enterprises Contractor, Gangaikondan | மதிப்பீட்டு விலைக்கே |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலைக்கே கொடுத்துள்ள M/s.Veena Enterprises Contractor, Gangaikondan ஒப்பந்ததாரர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.6644/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.805**

**பொருள் 4 :** விருதுநகர் மாவட்டம், அருப்புக்கோட்டை நகராட்சியில் **பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் பகுதி வளர்ச்சி திட்டம் 2019–20** ன் கீழ் அருப்புக்கோட்டை – போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–யிருந்து பகிர்மான குழாய் பதிக்கும் பணிக்கு (மலையரசன் கோவில் தெரு முதல் விருதுநகர் மெயின் ரோடு தமிழ்மணி தியேட்டர் அருகில் வரை) மற்றும் **சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத்திட்டம் 2019–20ன்** கீழ் அருப்புக்கோட்டை போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–இல் இருந்து மலையரசன் கோவில் கிழமேல் தெரு வரை பகிர்மான குழாய் பதிக்கும் பணி (போலீஸ் குவார்ட்டர்ஸ் பின்புறம் உள்ள OHT–யிருந்து மலையரசன் கோவில் தெரு வரை) ஆகிய பணிகளின் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை தினகரன் நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டண செலவினத் தொகை ரூ.7459/–ஐ Kal Publications(P) LTD., Madurai நிறுவனத்தாருக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண்.6574/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.806**

**பொருள் 5 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு சொந்தமான திருப்புவனம் தலைமை நீரேற்று நிலையத்தில் சூழ்நிலைகளை அறிந்திடவும் நிலையத்தின் பாதுகாப்பிற்காகவும் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தும் பணிக்கு மதிப்பீட்டு தொகை ரூ.0.99 இலட்சத்துக்கு இந்நகர்மன்றத் தீர்மான எண்.799, நாள்.25.10.2019ல் நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ளது.

அதன்பேரில் மேற்கண்ட பணிக்கு 14.11.2019 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விபரம் |
|---|---|---|
| 1. | திரு.M.காசிவிஷ்வநாதன் அருப்புக்கோட்டை | 1.66 % மதிப்பீட்டு விலையை விட குறைவாக |
| 2. | திரு.R.பஞ்சவர்ணம் அருப்புக்கோட்டை | 12.24 % மதிப்பீட்டு விலையைவிட அதிகமாக |

**அலுவலகக் குறிப்பு :–**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், மதிப்பீட்டு விலையை விட 1.66 சதவீதம் குறைவாக கொடுத்துள்ள திரு.M.காசிவிஷ்வநாதன், ஒப்பந்ததாரர் அருப்புக்கோட்டை அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை ஒப்புக்கொள்ளலாம்.

ந.க.எண்.6641/2019/இ1

**தீர்மானம் :**

அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.807**

**பொருள் 6 :** அரசாணை எண் (MS) 150 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர்வழுஙகல் துறை (MA IV) துறை, நாள் 19.11.2019ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை – 28 அவர்களின் சுற்றறிக்கை ந.க.எண். 40032/2012/ஆர்1, நாள் 20.11.2019ல் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரையின்படியும் அரசாணை எண் 76, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் துறை நாள் 26.07.2018ன்படி 01.04.2018ம் தேதி முதல் சொத்து வரி பொது சீராய்வு (Revision of Property Tax) மூலம் உயர்த்தப்பட்ட சொத்து வரி உயர்வினையும், சொத்து வரி விதிப்புக்கான மண்டல மதிப்பு (Zonal Rate's) 01.04.2019 முதல் உயர்த்ததப்பட்டதையும் மற்றும் 01.10.2017ம் தேதி முதல் சொத்து வரி மறு சீரமைப்பு (Remeasurement) செய்து உயர்த்தப்பட்டதையும் நிறுத்தி வைக்கத் தெரிவிக்கப்பட்டுள்ள விபரம் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

1. அரசாணையினை மன்றம் பதிவு செய்யலாம்.
2. மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.7282/2018/அ2

**தீர்மானம் :**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.808**

**பொருள் 7 :** அருப்புக்கோட்டை, சாத்துார் மற்றும் விருதுநகர் நகராட்சிக்கு கூட்டு குடிநீர் திட்டம், தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்த தமிழக அரசு அரசாணை (நிலை) எண் 147, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுஙகல் (குவ2) துறை நாள் 13.11.2019 மூலம் ரூபாய் 444.71 கோடிக்கு நிர்வாக அனுமதி அளித்து ஆணையிடப்பட்டுள்ளது. இதனை செயல் படுத்திட ஒருஙகிணைத்த நகர்ப்புற வளர்ச்சித் திட்ட (IUDM) மானியம் மற்றும் குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) மூலமாக வீட்டுவசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு நிறுவனம் (HUDCO) மூலமாக கடன் பெற்று செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தின் மொத்த மதிப்பீடு ரூபாய் 444.71 கோடி. இதில் அருப்புக்கோட்டை நகராட்சிக்கு திட்ட மதிப்பீடு ரூபாய் 224.91 கோடி ஆக நிர்ணயக்கப்பட்டுள்ளது. இதற்கு ஒருஙகிணைந்த நகர்ப்புற வளர்ச்சித் திட்டம் (IUDM) மானியமாக ரூபாய் 44.98 கோடி (20%) குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியம் (WSPF) கடனாக ரூபாய் 179.93 கோடி (80%) பெற்று திட்டத்தினை செயல்படுத்திட ஆணையிடப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை செயல்படுத்த குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தில் இருந்து கடன் உதவியாக ரூபாய் 179.93 கோடி பெறுவதற்கும் அதற்கான பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தினை அனுப்பிவைப்பதற்கும், குடிநீர் மற்றும் சுகாதார கூட்டு நிதியத்தின் நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக் ஒப்புதல் அளிக்கவும் மேலும் கடன் உதவி தொகை பெற கடன் பத்திரம் மற்றும் அதற்கான அனைத்து ஆவணங்களிலும் நகராட்சி சார்பாக நகராட்சி ஆணையர் கையொப்பமிட ஒப்புதல் வழங்கவும் தனிஅலுவலர் அவர்களின் அனுமதி வேண்டி பொருள் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

பொது மக்களுக்கு குடிநீர் வழங்க வேண்டிய அவசியத்தை கருத்தில்கொண்டு மேற்படி திட்டத்திற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 7275/2019/இ1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.809</u>**

**பொருள் 8 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்கள், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள், மகப்பேறு உதவியாளர்கள், ஆயாக்கள், அலுவலக உதவியாளர்கள், ஓட்டுநர்கள், கேங்கூலி, குழாய் பணியாளர்கள் மற்றும் இரவு காவலர்கள் ஆகியோர்களுக்கு 2019–2020ம் ஆண்டிற்கான சீருடைகள் அரசு அங்கீகாரம் பெற்ற காதி கிராப்ட் நிறுவனத்திடமிருந்து கொள்முதல் செய்யவும் அதற்காகும் உத்தேச செலவினத் தொகை ரூ.600000/– (தையல் கூலி உட்பட) மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண்.6391/2019/எச்1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.810</u>**

**பொருள் 9 :** அருப்புக்கோட்டை நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு ஜி, பிளாக் 16, நகரளவு எண்கள் 6/2 பகுதி, 9/1 பகுதி, 2 பகுதி, 4 பகுதி, 5 பகுதி, 10/2 பகுதி, 3, 12/1, 3ல் 7.22 ஏக்கர் (29247.67சமீ) பரப்பளவில் அமைந்திருந்த அனுமதியற்ற மனைப்பிரிவை அரசாணை எண் 78,172 H&UD நாள் 04.05.2017 மற்றும் 13.10.2017ன்படி வரன்முறைப்படுத்த கோரி திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் விண்ணப்பித்ததன் பேரில் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை அவர்களால் ம.வ(மு)/ந.ஊ.து.இ(மம) எண் 412/2019 நாள் 12.07.2019ல் கொள்கை அளவிலான ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. மேற்படி ஒப்புதல் பெறப்பட்ட வரைபடத்தில் ஒதுக்கீடு செய்யப்பட்ட பூங்கா மற்றும் சாலை இடத்தினை ஆவண எண் 7240/2009 நாள் 07.12.2009ல் திரு.ராமர், லெட்சுமணன் என்பவர்களாலும், ஆவண எண் 5168/2011 நாள் 18.07.2011ல் திரு.பாலசுப்பிரமணியன் என்பராலும் ஆவண எண் 4930/2019 நாள் 10.10.2019ல் திருமதி.அகமது மீரா மற்றும் பாத்திமா பீவி என்பவர்களாலும் நகராட்சிக்கு தானமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பூங்கா மற்றும் சாலை இடத்தினை நகராட்சி ஏற்று அசையாச் சொத்து பதிவேட்டில் பதிவு செய்யலாம்.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.5045/2019/எப்1

**<u>தீர்மானம் :</u>**

அனுமதிக்கப்பட்டது.

**<u>தீர்மான எண்.811</u>**

**பொருள் 10 :** அருப்புக்கோட்டை நகரம் வார்டு A பிளாக் 2 நகரபுல எண் 15/6A மற்றும் 15/6B ல் முறையே 0.9847 சமீ மற்றும் 0.0603 சமீ பரப்பளவு கொண்ட இடமானது மூக்கையா நாயக்கர் மகன் சாமித்துரை மற்றும் மூக்கையா நாயக்கர் மகன் வீராச்சாமி மற்றும் சாமித்துரை ஆகியோருக்கு பாத்தியப்பட்ட இடமாகும். மேற்படி இடத்தினை புதிதாக மனைப்பிரிவு அமைக்க உத்தேசம் செய்துள்ளதால் அன்னாரது விண்ணப்பம் 16.09.2019ல் பெறப்பட்டது.

மேற்படி இடமானது அங்கீகரிக்கப்பட வட மேற்கு விரிவாக்க நகரமைப்பு திட்டம் 1ல் அமைகிறது. மேலும் மனுதாரரின் இடத்தினை வழியாக 60 அடி அகல D3 D3 சாலை அமைகிறது. தற்பொழுது அந்த பகுதியில் புதிதாக எந்தவிதமான அபிவிருத்தியும் மேற்கொள்ளப்படாமல் காலிதரிசு நிலமாகவே இருந்துவருகிறது. மேலும் இதன் அருகே சற்று 750மீ தொலையில் 40' அடி அகல திட்ட சாலை F11, F12 அமையப்பெறுகிறது.

எனவே 60' அடி திட்ட சாலையினை நீக்கம் செய்வது குறித்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்

**அலுவலகக் குறிப்பு :—**

வடமேற்கு விரிவாக்க நகரமைப்பு திட்டம் 1ல் D3 D3 60' அடி திட்ட சாலையினை நீக்கம் செய்வது குறித்து அன்னாரது விண்ணப்பம் நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் மதுரை வழியாக நகர் ஊரமைப்பு ஆணையாளர், சென்னை அவர்களுக்கு பரிந்துரை செய்து அனுப்ப பரிந்துரைக்கலாம்.

ந.க.எண்4905/2019/எப்1

**தீர்மானம் :**

அலுவலகக் குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.812**

**பொருள் 11 :** அருப்புக்கோட்டை நகராட்சியில் அனைத்து பணிகளும் கணினி மூலமாக Phase – I, மற்றும் Phase – II, மென்பொருளின் (Software) மூலம் பணிகள் நடைபெற்றுவருகிறது. தற்சமயம் பயன்படுத்தப்பட்டுவரும் BSNL BB தொடர்பு அடிக்கடி துண்டிப்பு ஏற்பட்டு பணிகள் தடைபடுகிறது. எனவே பணிகள் தடையின்றி நடைபெற ஏற்கனவே உள்ள BSNL BB தொடர்பினை மாற்றி BSNL ன் OFC மூலம் இணையதள தொடர்பு வசதியினை பெற உத்தேச மதிப்பீடு ரூ.5000/— வருவாய்நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண்.6618/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.813**

**பொருள் 12 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 7 சௌந்திரபாண்டியன் தெருவில் நுண்உரக்கிடஙகு (Micro Compost Centre) அமைப்பதற்கு தூய்மை இந்தியா திட்டம் (2018—19) ன் கீழ் ரூ.52.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி துவஙகும் நேரத்தில் அப்பகுதியினை சேர்ந்தவர்களால் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கில் உயர்நீதிமன்றம் 25.10.2018ம் தேதியன்று அவ்விடத்தில் நுண் உரக்கிடஙகு அமைக்க தடை ஏதும் இல்லை எனவும் மேலும் மேற்கண்ட இடத்தில் பூஙகா அமைத்து (செடிகள் (Plantation), சிறுவர்கள் விளையாடும் உபகரணஙகள் (Play equipments), நடைபாதை (Foot Path)) அமைத்து அதனை முறையாக பராமரிக்குமாறு தீர்ப்பு வழஙகப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட இடத்தில் (செடிகள் (Plantation), சிறுவர்கள் விளையாடும் உபகரணஙகள் (Play equipments), நடைபாதை (Foot Path)) அமைப்பதற்கு உத்தேச மதிப்பீடு ரூ.1,60,000/— ஆகும். எனவே மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :—**

மன்றம் அனுமதிக்கலாம். ந.க எண்.7540/2019/இ1

**தீர்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீர்மான எண்.814**

**பொருள் 13 :** அருப்புக்கோட்டை நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 31ல் சப்பை இராமசாமி தெருவில் நுண் உரக்கிடங்கு (Micro Compost Centre) அமைப்பதற்கு தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் ரூ.54.00 இலட்சத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு 11.12.2018 ல் வேலை உத்தரவு வழஙகப்பட்டு ஒப்பந்ததாரா் மூலம் பணி துவஙகப்பட்டு Piller அமைக்கப்பட்டு Earth beam earth work பணி நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது அப்பகுதியைச்சோ்ந்த பொதுமக்களால் இவ்விடத்தில் MCC அமைக்க கூடாது என சென்னை உயா்நீதிமன்ற மதுரை கிளையில் வழக்கு தொடரப்பட்டது. மேற்கண்ட வழக்கானது 23.10.2019 தேதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு அப்பகுதியில் MCC அமைக்க தடை ஏதும் இல்லை எனவும் மேற்கண்ட இடம் பூஙகாவாக உள்ளதால் MCC அமைத்த இடம் போக மீதமுள்ள இடத்தில் பூஙகா, (செடிகள் (Plantation), சிறுவா்கள் விளையாடும் உபகரணஙகள் (Play equipments), நடைபாதை (Foot Path)) அமைத்து முறையாக நகராட்சி மூலம் பராமரிக்க வேண்டும் என தீா்ப்பளிக்கப்பட்டது. மேற்கண்ட தீா்ப்பின் அடிப்படையில் MCC அமைத்த இடம் போக மீதமுள்ள இடத்தில் (செடிகள் (Plantation), சிறுவா்கள் விளையாடும் உபகரணஙகள் (Play equipments), நடைபாதை (Foot Path)) அமைக்க உத்தேச மதிப்பீடு ரூ.1,60,000/– ஆகும். மேற்கண்ட பணியை நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :–**

மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க எண்.7541/2019/இ1

**தீா்மானம் :**

அனுமதிக்கப்பட்டது.

**தீா்மான எண்.815**